### தெரு நாய்கள் இனப்பெருக்க கட்டுப்பாடு பணிகளை துரிதப்படுத்தவும், அதற்கான

# உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் நிதி ஒதுக்கீடு!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, மே. 4-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (2.5.2025) தலைமைச் செயலகத்தில், பொது இடங்களில் குறிப்பாக நகரப் பகுதிகளில் நாய்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், பொதுமக்களுக்கு பாதிப்புகளும் அச்சுறுத்தலான சூழலும் நிலவுவதை கருத்தில் கொண்டு, இப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

தெரு நாய் தொல்லைகளை கட்டுப்படுத்துவது தொடர்பான மாண்பமை உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், உள்ளாட்சி அமைப்புகள், கால்நடை பராமரிப்புத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை ஆகிய துறைகள் இணைந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்கள் இக்கூட்டத்தில் பேசும்போது, பொதுமக்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கக்கூடிய, குறிப்பாக நகரப் பகுதிகளில், நாய்கள் இனப்பெருக்க கட்டுபாடு நடவடிக்கைகளை தீவிரமான முறையில் திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும் என்றும், அதற்கான தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டு நல்லதொரு மாற்றத்தை விரைவில் மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தினார்.

இதன் தொடர்ச்சியாக, சாலைகளில் சுற்றித்திரியும் நாய்களை பிடிப்பதற்கும், நாய் இனப்பெருக்க கட்டுப்பாடு பணிகளை அதிகளவில் மேற்கொள்ளவும், பின்வரும் நடவடிக்கைகள் எடுக்க முடிவெடுக்கப் பட்டுள்ளது.

1. நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ள 500 மருத்துவர்களுக்கு தேவையான பயிற்சிகள் வழங்கிடவும், உள்ளாட்சி அமைப்புகளில் 500 நபர்களுக்கு நாய்களை பிடிப்பதற்கான பயிற்சிகளும் வழங்கப்படும்.

2. தமிழ்நாடு முழுவதும் 100 அரசு கால்நடை மருத்துவமனைகளில் உள்கட்டமைப்பை மேம்படுத்தி, விலங்குகள் இனப்பெருக்க தடை அறுவை சிகிச்சை செய்யும் வசதிகள் உருவாக்கப்படும்.

3. கைவிடப்பட்ட, நோய்வாய்ப் பட்ட, காயமடைந்த, வயதான மற்றும் ஊனமுற்ற நாய்களுக்கு 72 காப்பகங்கள் அமைக்கப்படும். காப்பகங்கள் அமைக்க இடம் உள்ளாட்சி அமைப்புகளால் வழங்கப்படும். தொண்டு நிறுவனங்கள் இக்காப்பகங்களை பராமரிக்கும் பணியை மேற்கொள்ளும். இதற்கு தேவையான நிதி ஒதுக்கப்படும்.

4. மேலும், விலங்குகள் இனப்பெருக்க தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ள வசதி இல்லாத பகுதிகளில் கூடுதலாக அறுவை சிகிச்சை மையங்கள் மற்றும் அத்துடன் இணைந்த நாய் காப்பகங்கள் கால்நடை மருத்துவ வசதிகளுடன் அமைக்கப்படும்.

5. மாவட்ட அளவில் நாய்கள் இனப்பெருக்க கட்டுப்பாடு/ வெறிநோய் தடுப்பூசி பணிகள் துறை மற்றும் தனியார் மருத்துவர்கள் மூலம் மேற்கொள்ள கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

6. இந்திய விலங்குகள் நல வாரியத்தின் 11.4.2025ம் அறிவிக்கையின் படி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் அவர்கள் தலைமையில் மாநில அளவிலான விலங்குகள் இனப்பெருக்க கட்டுப்பாடு கண்காணிப்பு குழு அமைத்து சமீபத்தில் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பிலும் உள்ளூர் கண்காணிப்பு குழு அமைத்து நாய் இனப்பெருக்க கட்டுப்பாட்டு பணிகளை தீவிரமாக மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

7. உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் விலங்குகள் இனப்பெருக்க தடை அறுவை சிகிச்சை மேற்கொள்வதை கண்காணிக்க ஏதுவாக தலைமையிடம் மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் தேவையான அலுவலர்களை நியமித்து இத்திட்டம் சிறப்பாக செயல்படுவதை தமிழ்நாடு விலங்குகள் நல வாரியம் (AWB) உறுதி செய்ய வேண்டும். இப்பணிகளுக்கு தேவையான நிதி வழங்கப்படும்.

8. பெருநகர சென்னை மாநகராட்சியில் ஏற்கனவே 5 மையங்கள் செயல்படும் நிலையில், புதிதாக 10 நாய் இனப்பெருக்க கட்டுப்பாடு மையங்கள் உருவாக்கும் பணிகளை விரைந்து முடிக்கவும், இத்துடன் இணைந்து 10 புதிய கால்நடை மருத்துவமனைகள் தொடங்கவும் இக்கூட்டத்தில் சென்னை மாநகராட்சி நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டது.

9. அதிகரித்துவரும் நாய்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு, இனப்பெருக்க தடை அறுவை சிகிச்சை பணிகளை துரிதமாக மேற்கொள்ள கூடுதலாக நாய் பிடி வாகனங்களை உடனடியாக கொள்முதல் செய்யவும், அதற்கு தேவையான பணியாளர்களை நியமிக்கவும் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் இதர உள்ளாட்சி அமைப்புகள் நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்காணும் நடவடிக்கைகளுக்காக உட்கட்டமைப்பு வசதிகளை விரைந்து முடித்து, செயல்பாட்டிற்கு கொண்டு வந்து நாய் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை அனைத்துத் துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் . அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன்,பெருநகரசென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, செயலாளர் டாக்டர் என். சுப்பையன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், விலங்குகள் நல வாரிய உறுப்பினர் மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பதிவாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வாட்ஸ் அப்பில் வந்த செய்தி !




### புதுச்சேரியைச் சேர்ந்த

# மூத்த பத்திரிகையாளர் இரா.தணிகைத்தம்பி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மே. 4-

புதுச்சேரியைச் சேர்ந்த மூத்த பத்திரிகையாளர் இரா. தணிகைத்தம்பி அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

புதுச்சேரியைச் சேர்ந்த மூத்த பத்திரிகையாளர் இரா. தணிகைத்தம்பி அவர்கள் மறைவுற்ற செய்தியறிந்து பெரிதும் வருந்தினேன்.

இரா. தணிகைத்தம்பி அவர்கள் நவசக்தி, தினமலர், ஆனந்த விகடன் உள்ளிட்ட முன்னணி ஏடுகளில் பணியாற்றியவர். பெருந் தலைவர் காமராஜர் மீதும் காங்கிரஸ் பேரியக்கத்தின் மீதும் மிகுந்த பற்று கொண்டிருந்த அவர், புதுச்சேரி பத்திரிகையாளர் சங்கத் தலைவராகவும், அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டு குழு உறுப்பினராகவும் சிறந்த முறையில் பங்களித்தவர்.

இரா. தணிகைத்தம்பி அவர்களின் மறைவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### 36 நாள்களாக நடைபெற்ற சட்டப்பேரவைக் கூட்டத் தொடர்!

# 110 விதியின்கீழ் வெளியிட்ட முதலமைச்சரின் அறிவிப்புகள் காலத்தை வென்றவை!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

*சென்னை, மே.4-*

*36 நாள்களாக நடைபெற்ற சட்டப்பேரவைக் கூட்டத் தொடர், இந்தியாவின் இதர மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடியான எடுத்துக்காட்டாகும். 110 விதியின்கீழ் வெளியிட்ட முதலமைச்சரின் அறிவிப்புகள் காலத்தை வென்றவை! கொள்கை எதிரிகளுக்கு அன்றாடம் திகைப்பையும், மக்களுக்கு இனிப்பையும் தருவதே தமது உயிராக, கடமையாகக் கொண்டுள்ள நமது முதலமைச்சருக்கு ஒத்துழைப்பு நல்கும் அனைவருக்கும் பாராட்டு என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.*

*அவரது அறிக்கை வருமாறு:-*

*தமிழ்நாடு சட்டப்பேரவைத் தொடர் - பல துறைகளின் மானியக் கோரிக்கைகளுக்கு ஒப்புதல் அளித்து, 14.3.2025 அன்று தொடங்கி 36 நாள்களாக நடைபெற்று வந்த நிகழ்வுகள், நேற்றோடு (29.4.2025) முடிவடை ந்துள்ளது - வெற்றிகரமான வகையில்!*

*அரசியல் ஆரோக்கியத்துடன் உரையாடல்கள், எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்புகள் - இவையெல்லாம் மிகச் சிறப்புடன் நடைபெற்றுள்ளன. கொஞ்சம் சூடேறிய சில சமயங்களில்கூட, 'திராவிட மாடல்' ஆட்சி நாயகரான முதலமைச்சரின் தலையீட்டால், எல்லாம் சுமூகமாகவே ஆக்கங்கள் உருவாகி நடந்தன.*



*110 விதியின்கீழ் வெளியிட்ட முதலமைச்சரின் அறிவிப்புகள் காலத்தை வென்றவைகளாக, வருங்கால வரலாற்றின் பாதையை ஒளியூட்டுபவையாக, இந்தியாவின் இதர மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடி யான எடுத்துக்காட்டாகவும் திகழ்ந்தன.*

*மாநில சுயாட்சி உரிமைத் தீர்மானம், புரட்சிக் கவிஞர் பிறந்த நாளான ஏப்ரல் 29 ஆம் தேதி தொடங்கி, மே 5 ஆம் தேதிவரை (ஒரு வாரம்) தமிழ் மொழி வார நாளாகக் கொண்டாடப்படவேண்டிய ஆணை மற்றும் பல அடுக்கடுக்கான முற்போக்குத் திட்ட அறிவிப்புகள், அரசு ஊழியர் பெருமக்களுக்கு 9 சுவையான அறிவிப்புகள் - மக்கள் மகிழ்ச்சி ஊற்றைப் பெருக்கும் வண்ணம் அமைந்துள்ளன.*

*இவை எல்லாவற்றிற்கும் மேலாக முத்திரைப் பதித்தவை, காவல்துறை மானியத்தில் சட்டம் - ஒழுங்குபற்றியும், இன்னோரன்ன பல கருத்துகளைப் பகிர்வதற்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் சுமார் ஒரு மணிநேரத்திற்கு மேல் பேரவைத் தலைவர் அளித்தமை, ஜனநாயகத்தின் - இந்திய அரசமைப்புச் சட்டத்தின் விதிகளையும், விழுமியங்களை யும் மதித்து நடக்கும் 'எடுத்துக்காட்டான' (Exemplary) ஆட்சி தி.மு.க. ஆட்சி என்று சாட்சியம் பகருவதாகவே அமைந்துள்ளது!*

**வரலாறு படைத்து வரும் முதலமைச்சர்!**

*நமது முதலமைச்சர் அவர்கள், தான் ஒரு சராசரி அரசியல்வாதி அல்ல; முதிர்ந்த அரசியல் ஞானி, அனுபவக் களஞ்சியம், ஆர அமர யோசித்து, யோசித்து, நிதானம் தவறாது நடந்துகொள்ளும் ஒப்பற்ற ஆட்சித் தலைவர். அனைத்துத் தரப்பினரையும் தமது அன்பாலும், ஆளுமையாலும் கட்டிப் போடும் காந்த சக்தியுடனும் நடந்துகொண்டு வரலாறு படைத்து வருகிறார்!*

*தனக்குள்ள தடைக்கற்கள், இவ்வாட்சியைச் செயல்பட முடியாமற் செய்ய, கொள்கை எதிரிகளும், பாசிஸ்ட்டுகளும் எப்படித் தொல்லையை செயற்கையாக ஏற்படுத்தி, ஆட்சிக்கு நெருக்கடி தருகின்ற நிலைமை உள்ளது என்பதை ஒரு 'ஸ்கேன் ரிப்போர்ட்' போல, சட்டப்பேரவையில் நிகழ்த்திய, சரித்திர உரையில் சுட்டிக் காட்டியுள்ளார்!*

*"மேலே பாம்பு, கீழே நரிகள்; குதித்தால் அகழி, ஓடினால் தடுப்புச் சுவர் - இத்தடைகளைத் தாண்டித்தான் 'திராவிட மாடல்' ஆட்சியாக, தனது தலைமையில் இயங்கும் 'திராவிட மாடல்' ஆட்சி வேக நடை போட்டு, வெற்றித் தளத்தில் தகத்தகாய ஒளியுடன் வென்று, நின்று வருகிறது; இவ்வெற்றி 2026 தேர்தலிலும் 200 சட்டப்பேரவை இடங்களை இலக்காக மட்டுமல்ல; மக்கள் தரும் மகத்தான பரிசாக தமிழ் மண் - பகுத்தறிவு சுயமரியாதை மண்ணான இப்பெரியார் மண் வென்று காட்டும்" என்ற நம்பிக்கையின் உச்சத்தில் நின்று பிரகடனப் படுத்தியுள்ளார்.*

*முன்பு ஆண்ட அறிஞர் அண்ணா ஆட்சிக்கும், முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக்கும்கூட இவர் சந்திக்கும் பாம்பு, நரிக்கூட்டம், குதிக்க முடியாத அகழிகள், தடுக்கும் தடுப்புச் சுவர்கள் - இவ்வளவு கொடுமையான சோதனைகள், நிதி நெருக்கடிகள் - ஆளுநர் என்ற அரசமைப்புச் சட்டத்தை அன்றாடம் கொச்சைப்படுத்தத் தயங்காத ஓர் ஒத்துழையாமை இயக்க எதிர்க்கட்சித் தலைவர் போன்ற கீழிறக்க செயல்வாதி!*

**மக்களுக்கு இனிப்பை தருகிறார்!**

*இவ்வளவுக்கிடையேயும், சளைக்காமல் களமாடி வென்றுவரும் ஒரு லட்சிய வெற்றி வீரர்தான் நமது ஒப்பற்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள். சாதனைகளையே தினசரி நாள்களாக மக்களை எண்ண வைக்கவும், கொள்கை எதிரிகளுக்கு அன்றாடம் திகைப்பையும், மக்களுக்கு இனிப்பையும் தருவதே தமது உயிராக, கடமையாகக் கொண்டுள்ளார்.*

*அவருக்குப் பேராதரவு தரும் தி.மு.க. கூட்டணித் தோழமைக் கட்சியினரையும், கட்டுப்பாடு காக்கும் அவரது இயக்கத் தொண்டர்களையும், அவரது அமைச்சரவையினரையும் இன்முகத்தோடு முதலமைச்சரைப் புரிந்து செயல்படும் அதிகாரிகளையும் பாராட்டி மகிழ்கிறோம்!*

*"திராவிடம் வெல்லும் - வரலாறு என்றும் அதைச் சொல்லும்!"*

*இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*



கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மாநகராட்சி, அந்திவாடி பகுதியில் பாதாள சாக்கடை திட்ட அலுவலகத்தில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கான வரைப்படத்தை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி , மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் , ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ் , ஓசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

### காத்திருப்புப் போராட்டம் நடத்துவது சட்ட விரோதமாகும்!

# அங்கன்வாடி பணியாளர்களின் அனைத்து கோரிக்கைகளையும் அரசு நிறைவேற்றியுள்ளது!

## அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கை!

*சென்னை, மே.4-*

*அங்கன்வாடி ஊழியர்கள் எவ்வித முன்னறிவிப்புமின்றி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இது சட்ட விரோதமானதாகும். இதனால் அங்கன்வாடி குழந்தைகள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.*

*அங்கன்வாடி பணியாளர்களின் கோரிக்கைகளை இந்த அரசு அனைத்தையும் நிறைவேற்றியுள்ளது என்று சமூக நலத்துறை அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன் அவர்களின் அறிக்கை வருமாறு:-*

*தமிழ்நாடு அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் சங்கம், அங்கன்வாடி ஊழியர்களுக்கான கோடை விடுமுறையை மே மாதம் முழுவதும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து எவ்வித முன்னறிவிப்புமின்றி அனைத்து மாவட்ட அலுவலகங்கள் முன்பாக மே 2' 2025 முதல் காத்திருப்புப் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதனால் ஆங்காங்கே குழந்தைகள் மைய செயல்பாடுகள் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. ஏழை, எளிய குழந்தைகளுக்கு மதிய உணவு, முட்டை,*



*சத்துமாவு உள்ளிட்ட ஊட்டச்சத்து வழங்காமல் வேலையை புறக்கணிக்கும் செயல் குழந்தைகள் மைய பயனாளிகளை பாதிக்கக் கூடியதாக உள்ளதென்பது மிகவும் வருந்தத்தக்கது.*

*மே 2 - ம் தேதி எந்தெந்த குழந்தைகள் மையம் மூடப்பட்டுள்ளது, மாவட்ட திட்ட அலுவலகம் முன்பு முன்னறிவிப்பு மின்றி போராட்டத்தில் கலந்து கொள்ளும் ஊழியர்களின் விவரங்கள் பெறப்பட்டு வருகிறது. அரசு ஏழை, எளிய குழந்தைகளின் நலனுக்காக, அவர்களுக்கு தொடர்ந்து ஊட்டச்சத்து வழங்குவதை உறுதி செய்வதற்காக, முறையற்ற போராட்டங்களில் ஈடுபடும் குழந்தைகள் மைய பயணியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் மீது சட்டப்படியான கடும் நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.*

**கோடை விடுமுறை அறிவிப்பு!**

*அரசாணை (ப) எண்.117, சமூகநலன் (ம) மகளிர் உரிமைத்துறை நாள்: 30.04.2025ன்படி குழந்தைகள் மையங்களுக்கு (அங்கன்வாடி மையங்கள்) மே மாதத்தில் கோடை வெப்பத்தின் தாக்கத்திலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் நோக்கில் 2025 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆம் நாள் முதல் 25ம் நாள் முடிய 15 நாட்களுக்கு குழந்தைகள் மையங்களுக்கு கோடை விடுமுறை அளிக்கப் பட்டுள்ளது.*

*அரசு கோடை விடுமுறை வழங்கிய பின்னரும் காத்திருப்புப் போராட்டம் நடத்துவது சட்ட விரோதமான செயலாகும்.*

*உணவு பாதுகாப்புச் சட்டம் 2013ன்படி 300 நாட்களுக்கு குறையாமல் குழந்தைகள் மையப் பயனாளிகளுக்கு உணவு வழங்கப்படவேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது. தேசிய விடுமுறை, பண்டிகை நாட்களுக்கான விடுமுறை , உள்ளூர் விடுமுறைகள் மற்றும் ஞாயிற்றுக் கிழமை விடுமுறை களையும் கணக்கிட்டு, 300 நாட்கள் கண்டிப்பாக மைய செயல்பாடுகளும் அதன் மூலம் முன் பருவ பள்ளிக் குழந்தைகளுக்கு உணவு வழங்குவதும் உறுதி செய்யப்பட்டு வந்தது. ஆனால் அங்கன்வாடி பணியாளர்களின் தொடர் கோரிக்கையினை ஏற்ற இவ்வரசு 2022ஆம் ஆண்டு முதல் மே மாதம் சம்பளத்துடன் கூடிய கோடை விடுமுறை அறிவித்து, கடந்த 3 ஆண்டுகளாக செயல்படுத்தி வருகிறது. மேலும், உணவு பாதுகாப்பு சட்டத்தின் சரத்துகளை உறுதி செய்திடும் பொருட்டு மேற்கண்ட விடுமுறை நாட்களுக்கான சத்து மாவினை முன்கூட்டியே முன் பருவ கல்வி பயிலும் குழந்தைகளுக்கு மே மாதத்தின் ஆரம்பத்திலேயே வழங்கவும் ஆணை வழங்கியுள்ளது. குழந்தைகள் மைய பயனாளிகளுக்கு வழங்கப் பட்டு வரும் சத்துமாவு வீட்டுக்கு எடுத்து சென்று உண்ணும் வகையில் THR (TAKE HOME RATION) ஆக வழங்கப்பட்டு வருகிறது.*

*பதவி உயர்வு, பணி மாறுதல், காலிப்பணியிடங்களை நிரப்புதல் மற்றும் பணியாளர் நலன் தொடர்பாக பணியாளர் சங்கங்களால் அளிக்கப் பட்ட அனைத்து கோரிக்கைகளையும் இந்த அரசு நிறைவேற்றி தந்துள்ளது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, போராட்டத்தில் ஈடுபட்டு, குழந்தைகளின் நலனுக்கு எதிராக செயல்படும் அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் சங்கத்தினைச் சார்ந்த ஊழியர்கள் அனைவரும் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத் தப்படுவர்.*

*இவ்வாறு அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*